**வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அவர்களின் (பொ) செயல்முறைகள்**

ந.க. எண்.3236/ஆ5/ 2025. நாள்.04/08/2025

.....

பொருள் : பள்ளிக்கல்வி – அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் அடிப்படை ஆங்கில மொழித் திறன்களை மேம்படுத்தும் LEVEL UP திட்டத்தின் கீழ் மாதவாரியான மொழித்திறன் இலக்குகள் – ஆகஸ்ட் மாதத்திற்கான திறன் வளர் செயல்பாடுகள் – அட்டவணை வெளியிடுதல் – தொடார்பாக

பார்வை : சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.040626/கே/இ3/2025, நாள். 02.07.2025 மற்றும் 30.07.2025

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, அரசுப் பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களின் கேட்டல், வாசித்தல், பேசுதல் மற்றும் எழுதுதல் ஆகிய அடிப்படை ஆங்கில மொழித் திறன்களை முறையாக மேம்படுத்துவதற்கான LEVEL UP என்ற தன்னார்வத் திட்டத்தினை அறிமுகம் செய்து, தொடர் செயல்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மாணவர்களின் அடிப்படை மொழித்திறன்கள் மேம்படுவதற்கான மாதவாரியான இலக்குகள் வெளியிடப்பட்டு அதற்கான செயல்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜுன் மற்றும் ஜுலை மாதத்திற்கான மொழித்திறன் இலக்குகள் மற்றும் செயல்பாடுகள் கொண்ட அட்டவணை வெளியிடப்பட்டு பள்ளிகளில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம் சார்ந்த செயல்பாடுகள் வகுப்பறைகளில் நல்லதொரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

2025–2026ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளி மாணவர்கள் ஜுன் 2025 முதல் டிசம்பர் 2025 வரையுள்ள ஏழு மாதங்களில் ஆங்கில மொழியில் நான்கு அடிப்படைத் திறன்களை எளிதாக அடையும் வகையில் பல்வேறு செயல்பாடுகள் இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டு, ஒவ்வொரு மாதமும் அதன் மூன்றாம் அல்லது நான்காம் வாரத்தில் அடுத்து வரும் மாதத்திற்கான மொழித்திறன் இலக்குகள் கொண்ட அட்டவணை வெளியிடப்பட்டு வருகிறது. அவ்வகையில் 2025 ஆகஸ்ட் மாதத்தின் நான்கு வாரங்களுக்கான அடிப்படை ஆங்கில மொழித் திறன்வளர் இலக்குகள் மற்றும் கற்றல் செயல்பாடுகள் தற்போது வெளியிடப்படுகிறது.

ஆகஸ்ட் மாத அட்டவணையில் கேட்டல், பேசுதல், வாசித்தல் மற்றும் எழுதுதல் ஆகிய நான்கு அடிப்படை மொழித்திறன்களோடு இணைந்து சொற்களஞ்சியம், இலக்கணப் பயிற்சிகள் மற்றும் படைபப்பாற்றல் சார்ந்த எழுதுதல் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இதன் மூலம் மாணவர்கள் பாடப்பொருளுடன் தொடர்புடைய அடிப்படை இலக்கணப் பகுதிகளையும், புதிய சொற்களையும், படைப்பாற்றல் எழுதுதல் உள்ளிட்ட திறன்களை கற்றுக்கொள்ள ஏதுவாக செயல்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும் மொழிவளர் திறன் அட்டவணை செயல்பாடுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு அதன் இலக்குகள் அடையப்படுவதை உறுதி செய்வதோடு, முழுமையான அடிப்படை மொழித்திறன் அடைவிற்காக குறிப்பாக 6 முதல் 8ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் மேற்கொள்ளக் கூடிய மற்ற கற்றல் செயற்பாடுகளுடன் இணைந்து, இச்செயல்பாடுகளை ஆங்கில மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் மேற்கொள்வதை ஊக்குவித்து, அனைத்து மாணவர்களும் அடிப்படை மொழித் திறன்களை பெற உரிய வழிகாட்டுதல்கள் வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி), வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து அரசு பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இத்திட்டத்திற்கான ஆசிரியர் வழிகாட்டுதல்கள், கற்பித்தல் வளங்கள் மற்றும் மாதாந்திர இலக்குகள் https://sites.google.com/view/tnlevelup என்ற வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செயல்பாடுகள் மூலம் மாணவர்கள் பெற்ற அடிப்படை ஆங்கில மொழித் திறன் அடைவு குறித்து உரிய கால இடைவெளிகளில் பள்ளித் கல்வித் துறையால் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்
2. ஆகஸ்ட் மாதத்திற்கான செயல்பாடுகள் அட்டவணை

முதன்மை கல்வி அலுவலர்(பொ),
வேலூர்.

பெறுநர்:

1. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள்,
   அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக இணையதளம் மூலமாக)

நகல்–

1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக
   பணிந்து அனுப்பப்படுகிறது.
2. வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
   வேலூர் மாவட்டம். ( மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக